# ஹஜ் செய்வதெப்படி?



மின் நூல் ஆக்கம்:குலசை சுல்தான்

நன்றி: அல்-ஹஸா இஸ்லாமிய மையம் சவூதி அரேபியா

# பொருளடக்கம்


ஹாஜிகள் பேண வேண்டிய விரும்பத்தக்க அம்சங்கள்! ..........................4

இஹ்ராம் அணிதலும், நிய்யத் சொல்லுதலும்! ....................................9

ஹஜ்ஜின் மூன்று வகைகள்!..........................................................27

உம்ரா செய்யும் முறைகள்!..........................................................31

யவ்முத் தர்வியா (8ம் நாள்) கிரியைகள்!........................................41

அரஃபா (9ம் நாள்) கிரியைகள்! ......................................................44

யவ்முந் நஹ்ர் (10ம் நாள்) கிரியைகள்! ..........................................54

அய்யாமுத் தஷ்ரீக்கின் (11,12,13 ஆம் தினங்களின்) கிரியைகள்!.........62

ஹஜ்ஜின் ருக்னுகள் மற்றும் வாஜிபுகள்! ........................................66

மஸ்ஜிதுந் நபவியை தரிசித்தல் .....................................................68

'ஹாஜி' என்ற அடைமொழி - ஓர் நூதனச் செயல்(பித்அத்)....................72

# ஹஜ் செய்வதெப்படி?

## ஹாஜிகள் பேண வேண்டிய விரும்பத்தக்க அம்சங்கள்!

1) **இறையச்சத்தைக் கொண்டு உபதேசித்தல்:** ஒரு முஸ்லிம் உம்ராவுக்கோ ஹஜ்ஜிற்கோ பயணம் மேற்கொள்ளும்போது தமது குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் தக்வாவைப் பற்றி வஸிய்யத் செய்ய வேண்டும். தக்வா என்றால் நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுப்பதாகும். மேலும் கடன் சம்பந்தமான கொடுக்கல் - வாங்கல்களை எழுதி வைத்து அதற்கு சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(2) **தவ்பாவில் ஈடுபடுதல்:** ஹஜ் மற்றும் உம்ரா செய்பவர்கள் தங்களின் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடும் வகையில் கலப்பற்ற தவ்பா செய்ய வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: விசுவாசிகளே! நீங்கள்

அனைவரும் அல்லாஹ்வின் பால் தவ்பா செய்து மீளுங்கள்! அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்! (24:31). தவ்பா என்பது, பாவங்களிலிருந்து விலகி அதை விட்டுவிடுவதும் நடந்துவிட்டதை நினைத்து வருந்துவதும் இனி அதைச் செய்வதில்லை என்று உறுதியாக முடிவெடுப்பதுமாகும். மக்களிடம் பொருள், உடல், மானம் மரியாதை தொடர்பான ஏதேனும் அக்கிரமங்கள் ஏற்பட்டிருந்தால் பயணம் மேற்கொள்ளும் முன்பு சம்பந்தப்பட்டவர்களிடம் அவற்றைப் பரிகாரங்கள் மூலமாகவோ, மன்னிப்பு மூலமாகவோ தீர்த்துக்கொள்ள வேண்டும்.

(3) **ஹலாலான பொருளாதாரத்தைத் தேர்ந்தெடுத்தல்:** ஹஜ், உம்ராவில் ஆகும் செலவுகளுக்குரிய பொருளாதாரம்: ஹலாலானதுதானா? என்று உறுதிசெய்துகொள்ள வேண்டும். ஏனெனில், 'அல்லாஹ் நல்லவன்,

நல்லதைத் தவிர வேறெதையும் அவன் ஏற்றுக்கொள்வதில்லை'| என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்).

(4) **மனத்தூய்மை**: ஹஜ், உம்ரா செய்பவர்கள் அல்லாஹ்வின் திருமுகத்திற்காகவும் மறுமைக்காகவும் புனித இடங்களில் சொல்லாலும் செயலாலும் மேற்கொள்கின்ற அமல்கள் மூலம் இறை நெருக்கத்தைப் பெற வேண்டும் என்கிற கலப்பற்ற எண்ணத்துடனும் செயல்பட வேண்டும். அத்துடன் இந்த உலகாதாயத்திற்காகவோ, முகஸ்துதிக்காகவோ, புகழுக்காகவோ, பெருமைக்காகவோ இவற்றை மேற்கொள்வது என்ற நிலையை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். இவையெல்லாம் அமல்களைப் பாழாக்கும் காரணங்களாகும். அல்லாஹ் கூறுகிறான்: 'யார் இவ்வுலக வாழ்க்கையையோ, அதன் அலங்காரத்தையோ நாடுகின்றாரோ அவர்களுக்கு இவ்வுலகிலேயே

அவற்றைக் கொடுத்து விடுவோம். அதில் அவர்கள் எந்தக் குறைவும் ஏற்படுத்தப்பட மாட்டார்கள். அவர்களுக்கு மறுமையில் நரகத்தைத் தவிர வேறெதுவுமில்லை. உலகில் அவர்கள் செய்தவை அழிந்துவிட்டன. அவர்கள் செய்துகொண்டிருந்தவை அசத்தியமாகும். (11:15,16). மேலும் நான் அனைத்துக் கூட்டாளிகளைவிட்டும் தேவையற்றவன். யாரேனும் ஓர் அமலைச் செய்யும்போது என்னுடன் வேறெவரையும் கூட்டாக்கினால் நான் அவனையும் அவனது அக்காரியத்தையும் விட்டுவிடுவேன்' என அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

**(5) சிறந்த நண்பனைத் தேர்ந்தெடுத்தல்:** ஹஜ், உம்ரா செய்பவர்கள், தங்களின் பயணத்தோழர்களாக தக்வாவுடையவர்கள், மார்க்க ஞானம் உடையவர்கள், கட்டுப்பாடுள்ளவர்கள் போன்றவர்களைத் தேர்ந்தெடுக்க

வேண்டும். விவரமில்லாதவர்களையும் பாவமிழைப்பவர்களையும் தவிர்க்க வேண்டும்.

**(6) ஹஜ் - உம்ராவின் சட்டங்களைக் கற்றல்:** ஹஜ், உம்ராவில் மேற்கொள்ள வேண்டிய காரியங்களைப் பற்றி கற்றுக்கொள்வதுடன் அதில் ஏற்படும் சந்தேகங்களுக்கான விளக்கங்களை அறிஞர்களிடம் கேட்டுத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பயணமாகும்போது பயண துஆக்களை ஓதிக்கொள்ள வேண்டும்.

**(7) திக்ர், இஸ்திக்ஃபார்களை அதிகமாக்கிக்கொள்ளல்:** பயணத்தின்போது திக்ர், இஸ்திக்ஃபார், பணிவுடன்கூடிய துஆ, குர்ஆன் ஓதல், அதன் அர்த்தங்களைப் பற்றி சிந்தித்தல் ஆகியவற்றை அதிகமாக்குவதுடன் ஐவேளைத் தொழுகைகளை ஜமாஅத்துடன்

நிறைவேற்றவும் வேண்டும். ஆதாரமற்ற கருத்துக்களைக் கூறுதல், பொய், கோள், புறம், பரிகாசம் போன்றவற்றிலிருந்து நாவைப் பேணவும் வேண்டும்.

## இஹ்ராம் அணிதலும், நிய்யத் சொல்லுதலும்!

### இஹ்ராம் அணிதல்:

இஹ்ராம் என்பது அகராதிப்படி தஹ்ரீம் என்ற வார்த்தையிலிருந்து பிறந்த ஹரமில் அதாவது புனிதமான அம்சத்தில் பிரவேசித்தல் என்ற பொருளைக் கொண்ட வார்த்தையாகும்.

மார்க்க ரீதியாக, ஹஜ் - உம்ராவுக்கான காரியங்களில் நுழைவதற்கான நிய்யத்தாகும், இஹ்ராமில் தடுக்கப்பட்ட ஆடைகளைக் களையாதிருந்தாலும் சரியே!

## இஹ்ராமின்போது செய்ய வேண்டியவை:

1) நகங்கள், அக்குள் மற்றும் மறைவிடத்திலுள்ள முடிகளைக் களைந்து மீசையைக் குறைத்தல்: இஹ்ராம் அணிந்தபின் இவற்றை நீக்க அனுமதியில்லையாதலால் அவற்றை அகற்றுவதற்கு அவசியப்படாத வகையில் அவற்றைக் களைந்துவிட வேண்டும். ஏனெனில் ஹஜ் காலங்களிலல்லாமல் எல்லா காலங்களிலும் இவற்றைக் கவனத்தில்

கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்: இயற்கையான சுன்னத்கள் ஐந்து: கத்னா செய்தல், மறைவிடத்திலுள்ள முடியைக் அகற்றுதல், மீசையைக் குறைத்தல், நகங்களைக் களைதல், அக்குள் முடியைப் பிடுங்குதல் ஆகியனவாம். (புகாரீ, முஸ்லிம்).

2) **குளித்தல்,** மேனியில் வாசனை பூசுதல் (இஹ்ராம் ஆடையிலல்ல): நபி (ஸல்) அவர்கள், இஹ்ராம் அணிவதற்கு முன்பும் முதல் விடுப்பிற்குப்பின்பும் அதாவது தவாஃபுல் இஃபாளாவுக்கு முன்பும் அன்னாருக்கு நான் வாசனை பூசியுள்ளேன் என ஆயிஷா (ரழி) அறிவிக்கிறார்கள். (புகாரீ, முஸ்லிம்) மேலும் ஆயிஷா (ரழி), உம்ராவுக்கு இஹ்ராம் அணிந்த நிலையில் அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. பிறகு ஹஜ்ஜிற்காக அவர்கள் இஹ்ராம் அணியும்போது அவர்களைக் குளிக்குமாறு நபி (ஸல்) அவர்கள் ஏவியுள்ளார்கள்.

3) **ஆண்கள் தையலுள்ள ஆடைகளைத் தவிர்த்தல்:** ஆண்கள், தைக்கப்படாத ஒரு கீழாடையையும் ஒரு பரிவட்டத்தையும் அணிந்துகொள்ள வேண்டும். அவ்விரண்டும் வெண்ணிறமாக அமைந்தால் சிறப்பாக இருக்கும். நபி (ஸல்) அவர்கள், நீங்கள் இஹ்ராமின்போது ஒரு கைலியையும் ஒரு பரிவட்டத்தையும் செருப்புகளையும் அணிந்துகொள்க! எனக் கூறியுள்ளார்கள் (அஹ்மத்). பெண்கள், ஆண்களின் ஆடைகளுக்கு ஒப்பாகாத வகையில் கறுப்பு, பச்சை அல்லது வேறு நிறத்தில் எந்த ஆடையையும் அணியலாம். ஆயினும் அவர்கள் கையுறைகளையும் முகமூடியையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தலையை மூடும் முன்றாணையால் அந்நிய ஆடவர் முன்னிலையில் முகத்தை மறைத்துக்கொள்வது தவறில்லை.

4) **நிய்யத் செய்தல்:** ஹஜ் அல்லது உம்ராவை செய்யப்போவதாக மனதில் (நிய்யத்) எண்ணிக்கொள்ள வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள், அமல்களெல்லாம் எண்ணங்களைப் பொறுத்தேயாகும் எனக் கூறியுள்ளார்கள், (புகாரீ). மேலும் இந்த நிய்யத்தை வாயால் கூறவும் வேண்டும். அதாவது, நிய்யத், உம்ரா செய்வதாக இருந்தால் லப்பைக்க உம்ரத்தன் அல்லது அல்லாஹும்ம லப்பைக்க உம்ரத்தன் என்றும் ஹஜ் செய்வதாக இருந்தால் லப்பைக்க ஹஜ்ஜன் அல்லது அல்லாஹும்ம லப்பைக்க ஹஜ்ஜன் என்றும் கூற வேண்டும். நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள். வாகனத்தில் ஏறி அமர்ந்த பின்னர் நிய்யத் செய்வது - சொல்வதுதான் சிறப்பாகும். நபி (ஸல்) அவர்களும் அவ்வாறுதான் செய்துள்ளார்கள். இஹ்ராமைத் தவிர வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் நிய்யத்தை வாயால் கூறுவது மார்க்கத்தில் ஏற்படுத்தப்படவில்லை.

இஹ்ராம் அணிபவர் தமது காரியம் பூர்த்தியடையாது என்கிற அச்சமுள்ளவராக இருந்தால் இஹ்ராமின்போது, வழியில் ஏதேனும் தடை ஏற்பட்டுவிட்டால் தடை ஏற்படுத்தப்பட்ட இடமே நான் இஹ்ராமிலிருந்து விடுபடும் இடமாகும்| என நிய்யத் செய்துகொள்ள வேண்டும். ஏனெனில், ளபாஆ பின்த் ஸுபைர் (ரழி), அல்லாஹ்வின் தூதரே! நான் ஹஜ் செய்ய விரும்புகின்றேன். ஆனால் நான் சுகமில்லாமலிருக்கின்றேன்| என்று கூறியபோது நபி (ஸல்) அவர்கள், ஹஜ் செய்வீராக! நான் தடுக்கப்படுமிடம் நான் இஹ்ராமிலிருந்து விடுபடும் இடமாகும் என்று நிபந்தனை விதித்துக்கொள்ளும்!| எனக் கூறினார்கள். (புகாரீ, முஸ்லிம்).

## இஹ்ராமில் தடுக்கப்பட்டவை:

**இஹ்ராம் அணிந்தவர் செய்யக்கூடாத காரியங்கள் பதினொன்று:**

**1) காரணமின்றி உடம்பிலுள்ள முடிகளைக் களைதல்.** அல்லாஹ் கூறுகிறான்: பலிப்பிராணி அதற்குரிய இடத்தை அடையும் வரை உங்கள் தலை முடிகளை மழிக்காதீர்! (2:196). இதில் தலையை மழிப்பது மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் மழிப்பதுடன் களைவது பிடுங்குவது ஆகியவையும் அடங்கும். அதுபோலவே தலையுடன் உடம்பின் ஏனைய பகுதிகளும் அடங்கும். இஹ்ராம் அணிந்திருப்பவருக்கு அதிகமாக முடி இருப்பதன் காரணமாக நோய், பொடுகு, காயம், தலை வேதனை, கடுமையான உஷ்ணம் போன்ற சிரமங்கள் ஏற்பட்டால் முடியை அகற்றிவிட்டு அதற்காக பரிகாரம் கொடுக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் யாரேனும் வியாதியுற்றாலோ அல்லது தலையில் ஏதும் தொல்லை ஏற்பட்டாலோ (முடியை அகற்றிவிட்டு) அதற்கான பரிகாரமாக நோன்பு நோற்றல், தர்மம் செய்தல் அல்லது பலியிடுதல் எதையேனும் நிறைவேற்ற வேண்டும் (2:196). 'உமது தலையிலுள்ள

பொடுகு உமக்குத் தொல்லை தருகின்றதா?' என்று நபி (ஸல்) அவர்கள் கஃப் பின் உஜ்ரா (ரழி) அவர்களிடம் கேட்டபோது அவர் 'ஆம்' என்றதும் அன்னார், 'உமது தலையை மழிப்பீராக! அதற்குப் பரிகாரமாக, மூன்று நோன்புகள் நோற்பீராக! அல்லது ஆறு ஏழைகளுக்கு உணவளிப்பீராக! அல்லது ஓர் ஆட்டை அறுத்துப் பலியிடுவீராக!' என்று கூறினார்கள். (புகாரீ, முஸ்லிம்).

**2) காரணமின்றி கை-கால் விரல்களிலுள்ள நகங்களை வெட்டுதல் அல்லது களைதல்.**

**3) இஹ்ராம் அணிந்த பின் உடம்பிலோ ஆடையிலோ வாசனை பூசுதல்:** ஏனெனில் பூசப்பட்ட வாசனைத் திரவியத்தைக் கழுவுமாறு யஃலா பின் உமய்யா (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் ஏவியுள்ளார்கள். இஹ்ராம் அணிந்த பின் வாகனத்திலிருந்து விழுந்து இறந்தவரின் ஜனாஸாவுக்கு வாசனை பூச வேண்டாம் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (புகாரீ).

**4) முக்காடு, தொப்பி, தலைப்பாகை போன்றவற்றால் ஆண்கள் தலையை மறைத்தல்:** இஹ்ராம் அணிந்த பின் வாகனத்திலிருந்து விழுந்து இறந்தவரின் ஜனாஸாவுக்கு அவரது தலையை மூடாதீர் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது பொதுவாக தலையை மூடுவதைக் குறித்தாலும் தலைப்பாகையைப் பற்றிய குறிப்பாகவும் வந்துள்ளது. மேல் சட்டை, கால்சட்டை, தொப்பி, தலைப்பாகை, காலுறை ஆகியவற்றை

ஆண்கள் அணியக்கூடாது| என்பது நபிமொழி (புகாரீ, முஸ்லிம்). ஆனால் குடை, கூடாரம் போன்றவற்றின் மூலமாக நிழலை ஏற்படுத்திக் கொள்வதில் தவறில்லை. தலையை மூடுதல் என்ற நோக்கமின்றி எதையேனும் தலையில் சுமப்பதும் தவறில்லை.

**5) தரைவாழ் விலங்குகளைக் கொல்வது**, வேட்டையாடுவது, அது பற்றிய முயற்சிகளை மேற்கொள்வது மேலும் தமக்காவே வேட்டையாடப்பட்டதை அல்லது தமது உதவியால் வேட்டையாடப்பட்டதைப் புசிப்பது: அல்லாஹ் கூறுகிறான்: **விசுவாசிகளே! நீங்கள் இஹ்ராம் அணிந்திருக்கும்போது வேட்டைப் பிராணிகளைக் கொல்ல வேண்டாம்! (5:95) நீங்கள் இஹ்ராம் அணிந்திருக்கும்போது தரைவாழ் விலங்குகளை வேட்டையாடுவது உங்கள் மீது விலக்கப்பட்டுள்ளது. (5:86).**

6) **தைக்கப்பட்ட ஆடைகளை ஆண்கள் வேண்டுமென்றே அணிதல்:** தைக்கப்பட்ட ஆடை என்பது சட்டை, பனியன், கால்சட்டை போன்ற வடிவங்களில் தைக்கப்பட்டதாகும். ஆனால் தையல் உள்ள துணி, அதில் ஆடையின் வடிவமைப்பு ஏதும் இல்லையெனில் அதையணிவது தவறில்லை, கச்சை, கைக்கடிகார வார், செருப்பிலிருக்கும் தையல்களைப்போல.

7) **பெண்கள் முகமூடி மற்றும் கையுறைகளை அணிதல்:** ஏனெனில் நபி (ஸல்) அவர்கள், பெண்கள் முகமூடியையோ கையுறைகளையோ அணிய வேண்டாம்! எனக் கூறியுள்ளார்கள். (புகாரீ) அந்நிய ஆடவர் தம் முன்னால் வந்தால் முகத்தையும் கைகளையும் மூடிக்கொள்ளலாம், முன்றாணையின் மூலமாக. இது பற்றி ஆயிஷh (ரழி) அறிவிக்கும்போது

நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது வாகனத்தில் வந்த சிலர் எங்களைக் கடந்தபோது எங்களில் சிலர் தங்கள் முன்றாணைகளால் முகத்தை மறைத்துக்கொண்டு அவர்கள் போன பின்னர் திறந்து கொண்டோம். (அபூ தாவூத், இப்னு மாஜா, தாருகுத்னீ).

8) **திருமண ஒப்பந்தம் செய்தல்**: இஹ்ராம் அணிந்திருப்பவர் தமக்காகவோ அல்லது வலீயாக, வகீலாக மாறி பிறருக்காகவோ திருமண ஒப்பந்தம் செய்யலாகாது. இஹ்ராம் அணிந்திருப்பவர் திருமண ஒப்பந்தம் செய்வதோ செய்விக்கப்படுவதோ அது பற்றிய பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதோ கூடாது என்பது நபிமொழி. (முஸ்லிம்).

9) **வீணான விஷயங்கள்**: நண்பர்கள், பணியாளர்கள் போன்றவர்களுடன் வீணாக சண்டை சச்சரவு மேற்கொள்ளல்.

10) **ஆபாசமான காரியங்கள்:** கட்டியணைத்தல், சுய இன்பம் மூலமாக விந்தை வெளியேற்றல்.

11) **உடலுறவு கொள்ளல்:** அதன் ஆரம்ப நிலைகளான முத்தமிடுதல் இச்சையுடன் தீண்டுதல், ஆண்-பெண் உடலுறவு சம்பந்தமான செய்திகளைப் பேசுதல். அல்லாஹ் கூறுகிறான்: யார் ஹஜ் செய்கின்றாரோ அவர் ஆபாசமான காரியங்களில் ஈடுபட வேண்டாம். (2:197) ஆபாசம் என்பது இங்கே உடலுறவைக் குறிக்கும் என இப்னு அப்பாஸ் (ரழி) கூறியுள்ளார்கள்.

**தடுக்கப்பட்டவற்றை மேற்கொள்வோர் மூன்று வகையினராவர்:**

1) தக்க காரணமின்றி மேற்கொண்டவர். அவர் குற்றவாளி என்பதுடன் அதற்காகப் பரிகாரம் செய்ய வேண்டும்.

2) நோயின் காரணமாக தலையை மழிப்பது போன்ற தக்க காரணத்தால் மேற்கொண்டவர், இவர் மீது குற்றமில்லை. ஆயினும் பரிகாரம் செய்ய வேண்டும்.

3) உறக்கம், மறதி, அறியாமை, நிர்பந்தம் போன்ற காரணங்களால் மேற்கொண்டவர், அவர் மீது குற்றமில்லை.

தடுக்கப்பட்டவற்றில் முடியை அகற்றுவது, நகங்களைக் களைவது, நறுமணம் பூசுவது, உடலுறவு அல்லாத ஆபாச செயல்கள், ஆண்கள் தையலாடை அணிதல் மற்றும் தலையை மறைத்தல், பெண்கள்

முகமூடியையோ கையுறைகளையோ அணிதல் ஆகியவற்றில் ஏதேனுமொன்று மேற்கொள்ளப்பட்டால் அதற்கு மூன்று பரிகாரங்களில் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். அவை:

(அ) ஓர் ஆட்டைப் பலியிட்டு அதனை ஏழைகளுக்குப் பங்கிட வேண்டும், பலியிடுபவர் அதிலிருந்து உண்ணக்கூடாது.
(ஆ) ஓர் ஏழைக்கு அரை ஸாவு (1¼ கிலோ) வீதம் ஆறு ஏழைகளுக்கு உணவு வழங்க வேண்டும்.
(இ) மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும்.

தடுக்கப்பட்டவற்றில் சில, மேற்கண்ட சட்டங்களிலிருந்து விலக்குப் பெறுகின்றன:

1- திருமண ஒப்பந்தம். இது தடுக்கப்பட்டதுதான் என்றாலும் அதைச் செய்தால் அதற்காகப் பரிகாரம் செய்ய வேண்டியதில்லை.

2- வேட்டைப் பிராணிகளைக் கொல்லுதல். தடுக்கப்பட்ட இதனை வேண்டுமென்றே மேற்கொள்பவர் தாம் கொன்றதற்குப் பகரமாக அதற்கு ஈடான ஒன்றைப் பலியிட வேண்டும்.

3- உடலுறவு. தடுக்கப்பட்டவற்றில் மிகப்பெரியது இதுவே. இதில் இரு நிலைகள்:

முதல் நிலை:

# இஹ்ராம் அணிதலும் நிய்யத் சொல்லுதலும்!

- முதல் விடுப்புக்கு (பத்தாம் நாள் இஹ்ராமைக் களைவதற்கு) முன்பு இது நிகழ்ந்தால் அதற்கான சட்டம். 1- ஹஜ் நிறைவேறாது 2- ஹஜ்ஜின் கிரியைகளை முழுமைப்படுத்தியாக வேண்டும் 3- அடுத்த ஆண்டு அதைக் களா செய்ய வேண்டும் 4- ஓர் ஒட்டகத்தைப் பலியிட்டு ஹரமில் உள்ள ஏழைகளுக்கு வழங்கி பரிகாரம் காண வேண்டும் 5- குற்றவாளியாகுவதால் அதற்காக அல்லாஹ்விடம் தவ்பா செய்ய வேண்டும்.
- **இரண்டாம் நிலை:** முதல் விடுப்பிற்குப் பிறகு உடலுறவு நிகழ்ந்திருந்தால். இதனால் ஹஜ் நிறைவேறிவிடும். ஆனாலும் ஓர் ஆட்டைப் பலியிட வேண்டும். இதில் பெண்ணுக்கும் இதே சட்டம்தான், நிர்பந்தமின்றி சுயமாக இணங்கியிருந்தால்.

எச்சரிக்கை: சிலர் ஹஜ்ஜின்போது வியாபாரம் செய்வது அல்லது உழைப்பது தடுக்கப்பட்டுள்ளது என்றோ அதனால் ஹஜ்ஜின் நன்மைகள் குறைந்துவிடும் என்றோ கருதுகின்றனர். ஆனால் அவ்வாறொன்றுமில்லை. ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் இரட்சகனிடமிருந்து நீங்கள் அருளைத் தேடுவதில் எந்தக்குற்றமும் உங்கள் மீது இல்லை. (2:189).

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மக்கள் முதல் ஹஜ்ஜின்போது மினா, அரஃபா, துல் மஜாஸ் சந்தை ஆகிய பகுதிகளில் வியாபாரம் செய்து வந்தனர். பிறகு அது தடுக்கப்பட்டுவிட்டது என்று அஞ்சினர். அப்போதுதான் இந்த வசனம் இறங்கிற்று. (புகாரீ, முஸ்லிம்).

## ஹஜ்ஜின் மூன்று வகைகள்!

1- தமத்துஃ: ஒருவர் ஹஜ்ஜின் மாதங்களான ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ்ஜின் பத்து தினங்களில் உம்ராவுக்காக மட்டும் இஹ்ராம் அணிந்து அதை நிறைவேற்றியதும் இஹ்ராமைக் களைந்துவிட்டு பிறகு துல்ஹஜ் 8-ஆம் நாள் ஹஜ்ஜிற்காக இஹ்ராம் அணிந்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

2- இஃப்ராத்: ஹஜ்ஜிற்காக மட்டும் இஹ்ராம் அணிதல். அதாவது லப்பைக்க ஹஜ்ஜன் என்று நிய்யத் செய்துவிட்டு மக்காவை அடைந்ததும் தவாஃபுல் குதூம் செய்ய வேண்டும். அதைத் தொடர்ந்து ஹஜ்ஜின் ஸயீயையும் செய்யலாம்.

3- கிரான்: ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து லப்பைக்க உம்ரதன் வ ஹஜ்ஜன் என்று நிய்யத் செய்து இஹ்ராம் அணிய வேண்டும். அல்லது

# ஹஜ்ஜின் மூன்று வகைகள்!

முதலில் உம்ராவுக்காக நிய்யத் செய்து பிறகு தவாஃபை ஆரம்பிக்கும் முன்பு ஹஜ்ஜையும் அதில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

**ஹஜ்ஜின் வகைகளுக்கிடையேயான வேறுபாடுகள்:**

- 1- நிய்யத்: இஃப்ராத் செய்பவர், ஹஜ்ஜை மட்டும் நிய்யத் செய்ய வேண்டும். கிரான் செய்பவர் உம்ராவையும் ஹஜ்ஜையும் சேர்த்து நிய்யத் செய்ய வேண்டும். தமத்துஃ செய்பவர் முதலில் உம்ராவுக்காக நிய்யத் செய்துவிட்டு பிறகு ஹஜ்ஜிற்காக இஹ்ராம் அணியும் போது ஹஜ்ஜிற்காக நிய்யத் செய்ய வேண்டும்.
- 2- குர்பானி: கிரான் மற்றும் தமத்துஃ செய்பவர்கள், குர்பானி கொடுக்க வேண்டும். அல்லது அதற்குப் பகரமாக மூன்று நோன்புகள் ஹஜ்ஜின் தினங்களிலும் ஏழு நோன்புகள் வந்த பின்பும் ஆக மொத்தம் பத்து நோன்புகள் நோற்க வேண்டும். இஃப்ராத் செய்பவர் குர்பானியும் கொடுக்க வேண்டியதில்லை, நோன்பும் நோற்க வேண்டியதில்லை.

- 3- ஸயீ: கிரான் மற்றும் இஃப்ராத் செய்பவர்கள் தாவாஃபுல் குதூமுக்குப் பிறகு ஸயீ செய்திருந்தால் தவாபுல் இஃபாளாவுக்குப் பிறகு அவர்கள் ஸயீ செய்ய வேண்டியதில்லை. ஆனால் தமத்துஃ செய்பவர் உம்ரா செய்யும்போதும் ஸயீ செய்ய வேண்டும். அதுபோல தவாஃபுல் இஃபாளாவுக்குப் பிறகும் ஸயீ செய்ய வேண்டும்.

**சிறந்த வகை ஹஜ் எது?**

இவற்றில் சிறந்த வகை தமத்துஃ ஹஜ்ஜாகும். இதற்கான ஆதாரம் யாதெனில்: நபி (ஸல்) அவர்கள், தமது தோழர்கள் தவாஃபும் ஸயீயும் செய்த பின் அவர்களில் பலிப்பிராணியைக் கொண்டு வராதவர்களை இஹ்ராமிலிருந்து விடுபடுமாறும் அதை உம்ராவாகக் கருதிக்கொள்ளுமாறும் கூறினார்கள். அந்த ஹஜ்ஜில் பலிப்பிராணிகளைக் கொண்டு வந்தவர்கள் குறைவுதான் (முஸ்லிம்). யார் பலிப்பிராணியைக் கொண்டு வரவில்லையோ அவர்கள் அதை

உம்ராவாகக் கருதிக்கொள்ள வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். அப்போது தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் ஹஜ்ஜிற்காக நிய்யத் வைத்திருக்கும்போது எவ்வாறு அதை உம்ராவாக ஆக்க இயலும்?' என்று கேட்டதற்கு அன்னார், 'நான் உங்களுக்கு ஏவியதைச் செய்யுங்கள்!' என்றார்கள் (முஸ்லிம்). மேலும் இந்த முறையானது, அதிகமான அமல்களைக் கொண்டதும் ஆனால் செயல்படுத்துவதற்குச் சிரமமில்லாததுமாகும். சில அறிஞர்கள், தமத்துஃ ஹஜ்ஜைத் தேர்ந்தெடுப்பதை வாஜிபாகவே ஆக்கியுள்ளனர்.

குறிப்பு:- கிரான் அல்லது இஃப்ராத் செய்வதாக இஹ்ராம் அணிந்திருப்பவர் பிறகு அதைத் தமத்துஃவாக மாற்ற நாடினால் நிய்யத்தை மாற்றிக்கொள்ளலாம்

## உம்ரா செய்யும் முறைகள்!

ஹஜ்-உம்ரா செய்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய பொதுவான அம்சங்களை ஏற்கனவே பார்த்தோம். அவைபோக உம்ரா செய்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய அம்சங்களாக:

1- நிய்யத் செய்து இஹ்ராமில் நுழைந்ததும் நபி (ஸல்) அவர்கள் கூறிய தல்பியாவை - லப்பைக்கல்லாஹும்ம லப்பைக்க லப்பைக்க லா ஷரீக்க லக லப்பைக்க இன்னல் ஹம்த வந்நிஃமத்த லக வல் முல்க் லாஷரீக்க லக - கூற வேண்டும்.

மஸ்ஜிதுல் ஹராமை அடைந்ததும் வலது காலை முன் வைத்து அதில் நுழையும்போது பிஸ்மில்லாஹி வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹி அவூது பில்லாஹில் அளீம் வ பிவஜ்ஹிஹில் கரீம் வஸுல்தானிஹில் கதீம் மினஷ்ஷைத்தானிர்ரஜீம்,

அல்லாஹும்மஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மத்திக்க என்று ஏனைய மஸ்ஜிதுகளில் நுழையும்போது ஓதுவதைப் போல ஓதிக்கொள்ள வேண்டும். பிறகு கஃபாவை அடைகின்ற வரை தல்பியாவைத் தொடர வேண்டும்.

2- கஃபாவை அடைந்ததும் தல்பியாவை நிறுத்திவிட்டு ஹஜருல் அஸ்வதிற்கு நேராகச் சென்று பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் அல்லது அல்லாஹு அக்பர் என்று கூறிக்கொண்டு அதை வலக்கையால் தொட்டுத் தடவ  வேண்டும். இயன்றால் முத்தமிட வேண்டும். கூட்ட நெரிசலில் பிறருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது. முத்தமிட இயலாதபோது கையாலோ கைத்தடி போன்றவற்றாலோ அதைத் தொட்டு தொட்டதை முத்தமிட்டுக்கொள்ள வேண்டும். அதுவும் இயலாதபோது அல்லாஹு அக்பர் கூறி எதைக்கொண்டேனும் அதை நோக்கி இஷாரா - சைகை செய்ய வேண்டும். சைகை செய்ததை

முத்தமிட வேண்டியதில்லை. தவாஃப் நிறைவேறுவதற்கு பெருந்தொடக்கு மற்றும் சிறுதொடக்கிலிருந்து சுத்தமாகியிருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். ஏனெனில் தவாஃபு என்பது தொழுகையைப் போன்றதாகும், ஆயினும் தவாஃபில் பேசுவதற்கு அனுமதியுள்ளது.

3- கஃபா, இடது புறமாக இருக்குமாறு அதை ஏழு முறை வலம் வர வேண்டும். ருக்னுல் யமானிக்கு நேராக வந்ததும் இயன்றால் பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர் எனக் கூறி வலக்கையால் அதைத் தொட்டுக்கொள்ள வேண்டும்; முத்தமிட வேண்டியதில்லை. அது சிரமமாகத் தெரிந்தால் அதை விட்டுவிட்டு தவாஃபைத் தொடர வேண்டும். அதை நோக்கி சைகை செய்யவோ தக்பீர் கூறவோ கூடாது. ஆனால் ஹஜருல் அஸ்வதைப் பொருத்தவரை நாம் ஏற்கனவே

கூறியிருப்பதைப் போல அதைக் கடக்கும்போதெல்லாம் தொட்டு முத்தமிட்டு தக்பீர் கூற வேண்டும். அல்லது சைகை செய்து தக்பீர் கூற வேண்டும். ஆண்கள் தவாஃபுல் குதூமில் முதல் மூன்று சுற்றுக்களில் நெருக்கமாக அடிகளை எடுத்துவைத்து சற்று வேகமாக விரைவது விரும்பத்தக்கது. அதுபோல ஆண்கள் தவாஃபுல் குதூமின் எல்லா சுற்றுக்களிலும் மேலாடையின் வலது பாகத்தை இடது கையின் அக்குள் வழியாக எடுத்து அதை இடது தோளின் மீது போட்டு வலது புறத்தைத் திறந்து வைத்திருப்பதும் விரும்பத்தக்கதாகும். இந்தச் சுற்றுக்களில் இயன்றவரை திக்ரு மற்றும் துஆக்களை அதிகமதிகம் ஓதிக்கொள்வதும் நல்லது. தவாஃபின் போது ஓதுவதற்கென்று எந்த துஆவும் திக்ரும் குறிப்பிடப்படவில்லை. எனவே விரும்பிய துஆக்களை, திக்ருகளை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் அனைத்து சுற்றுகளிலும் ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வதுக்குமிடையே

**'ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தன் வ ஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார்'**| என்ற துஆவை ஓதிக்கொள்ள வேண்டும்.

ஏழாவது சுற்றின் முடிவில் ஹஜருல் அஸ்வதைத் தொட்டோ முத்தமிட்டோ சைகை செய்தோ தக்பீர் கூறி தவாஃபை முடித்ததும் மேலாடையைச் சரிசெய்து வலது தோளையும் மறைத்து அணிந்துகொள்ள வேண்டும்.

**பைத்துல்லாஹ்வை வலம் வருதல்:**

4- பிறகு இயன்றால் மகாமு இப்ராஹீமுக்குப் பின்னால் இரண்டு ரக்அத்கள் தொழ வேண்டும். இயலாதபோது பள்ளியின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் தொழலாம். சூரத்துல் ஃபாத்திஹாவுக்குப்பின் முதல் ரக்அத்தில் சூரத்துல் காஃபிரூனும் இரண்டாவது ரக்அத்தில் சூரத்துல் இக்லாஸும் ஓதுவது மிகவும் சிறந்தது. வேறு சூராக்களை ஓதினாலும் தவறில்லை. ஸலாம் கொடுத்ததும் முடிந்தால் ஹஜருல் அஸ்வதை வலது கையால் தொட்டு முத்தமிடலாம்.

**மகாமு இப்ராஹீமுக்குப் பின்னால் தொழுதல்:**

5- பிறகு ஸஃபா பக்கமாகப் போய் அதில் ஏறி (இயன்றால் ஏறுவதே நல்லது) நின்று கொண்டு ஸயீயை ஆரம்பிக்கும் முன்பு **'இன்னஸ் ஸஃபா வல் மர்வத்த லில்லாஹ்...'** (2:158) என்ற வசனத்தை ஓத

வேண்டும். கிப்லாவை முன்னோக்கி நின்றுகொண்டு அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் கூறி பிறகு,

**'லாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹ் அன்ஜஸ வஃதஹ் வ நஸர அப்தஹ் வ ஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ்'** என்று ஓதுவது விரும்பத்தக்கதாகும். பிறகு கைகளை உயர்த்தி இந்த திக்ருகளைய்யும் துஆக்களையும் மும்முறை ஓத வேண்டும். பிறகு அங்கிருந்து இறங்கி மர்வாவை நோக்கி முதல் பச்சைக் கம்பம் வரை நடக்க வேண்டும். பிறகு அங்கிருந்து இரண்டாவது பச்சைக்கம்பம் வரை சற்று விரைய வேண்டும். பெண்கள் ஓட வேண்டியதில்லை. பிறகு மர்வாவை வந்தடைந்ததும் அதில் ஏறி (அதுவே சிறந்தது) நின்றுகொண்டு ஸஃபாவில் செய்தது போலவே (ஆயத் ஓதுவதைத் தவிர

மற்றவற்றைச்) செய்ய வேண்டும். இதுவெல்லாம் ஆரம்பமாக ஸஃபா-மர்வாவில் ஏறும்போது மட்டும்தான். பிறகு அங்கிருந்து இறங்கி ம ர்வாவை நோக்கி வரும்போது பச்சைக்கம்பங்களுக்கிடையே சற்று விரைய வேண்டும். ஸஃபாவிலிருந்து மர்வா வரை ஓர் ஓட்டம், மர்வாவிலிருந்து ஸஃபா வரை மறு ஓட்டம் என இவ்வாறு ஏழாவது ஓட்டம் மர்வாவில் முடிவடையும். அவசியப்பட்டால் வாகனத்தில் சவாரி செய்துகொண்டும் ஸயீ செய்யலாம். ஸயீயின்போது இயன்ற அளவுக்கு திக்ரு, துஆக்களை அதிகப்படுத்திக் கொள்வதும் சிறு தொடக்கிலிருந்து தூய்மையாகிக் கொள்வதும் விரும்பத் தக்கவையாகும். சிறு தொடக்கிலிருந்து தூய்மையாகா விட்டாலும் அதாவது உழூவின்றியும் ஸயீ செய்யலாம்.

**ஸஃபா – மர்வாவுக்கிடையே ஸயீ செய்தல்:**

6) ஸயீ முடிந்ததும் தலைமுடியை மழிக்கவோ அல்லது குறைக்கவோ வேண்டும். முழுமையாக மழிப்பதே சிறந்தது. ஆனால் ஹஜ்ஜுக் காலத்தில் உம்ராவுக்கு வந்திருந்தால் ஹஜ்ஜிற்காகவும் முடியை எடுக்க வேண்டியதிருப்பதால் இப்போது முடியைக் குறைப்பதே சிறந்தது. பெண்கள் தங்கள் முடியின் நுனியில் நகக் கண் அளவுக்கு அல்லது அதைவிடக் குறைவாக வெட்ட வேண்டும்.

இஹ்ராம் அணிந்திருப்பவர் மேற்கண்ட இந்தக் காரியங்களைச் செய்து முடித்துவிட்டால் அவரது உம்ரா நிறைவேறி விடும்;. அல்ஹம்து லில்லாஹ்!

**உம்ராவின் ருக்னுகள் மற்றும் வாஜிபுகள் பற்றிய சுருக்கம்:**

உம்ராவின் ருக்னுகள்: (1) இஹ்ராம் அணிதல் (நிய்யத்) (2) தவாஃப் (3) ஸயீ.

அதன் வாஜிபுகள்: (1) மீக்காத்தில் இஹ்ராம் அணிதல் (2) முடியை மழிப்பது அல்லது குறைப்பது.

## யவ்முத் தர்வியா (8ம் நாள்) கிரியைகள்!

'யவ்முத் தர்வியா'| என்று இதற்குப் பெயர் வரக் காரணம் அதற்குப் பின்னுள்ள நாட்களுக்காக மக்கள் அன்றைய தினம்தான் தண்ணீர் சேகரித்துக்கொள்வர்.

1) தமத்துஃ வகை ஹஜ் செய்பவர்களும் ஹஜ் செய்ய நாடியுள்ள மக்காவாசிகளும் இன்றைய தினம் தாம் தங்கியிருக்கும் இடத்திலிருந்துக்கொண்டு இஹ்ராம் அணிய வேண்டும். கிரான் மற்றும் இஃப்ராத் செய்பவர்கள் தங்கள் இஹ்ராமில் தொடர்ந்து நீடிப்பர்.

2) 'லப்பைக்க ஹஜ்ஜன்' என்று கூறி நிய்யத் செய்துவிட்டு தல்பியாவைத் தொடங்க வேண்டும்.

3) ஹஜ்ஜை முழுமைப்படுத்த இயலாமல் தடை ஏதேனும் ஏற்படும் என்கிற அச்சம் உண்டாகுமானால் 'எனக்கு ஏதாவது தடை ஏற்படுமானால் அந்த இடமே நான் இஹ்ராமிலிருந்து விடுபடும் இடமாகும்' என்ற நிபந்தனை ரீதியான நிய்யத் வைத்துக்கொள்ள வேண்டும். இதன் நன்மை யாதெனில், ஒரு வேளை அவர் தடுக்கப்பட்டு ஹஜ்ஜை முழுமைப்படுத்த இயலாமற்போனால் அவர் இஹ்ராமைக் களைந்துகொள்ளலாம். அதனால் அவர் மீது எந்தப் பரிகாரமும் கிடையாது.

4) ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்ததும் சூரியன் உச்சியிலிருந்து சாய்வதற்கு முன்பு மினாவை நோக்கி தல்பியா கூறிக்கொண்டே செல்ல வேண்டும். அங்கு ளுஹர், அஸர், மக்ரிப், இஷா ஆகிய தொழுகைகளை

அதனதன் நேரத்தில் நான்கு ரக்அத் தொழுகைகளை மாத்திரம் இரு ரக்அத்களாகச் சுருக்கித் தொழ வேண்டும்.

5) அன்றைய (அரஃபா நாள்) இரவில் மினாவில் தங்க வேண்டும். ஃபஜ்ர் தொழுதுவிட்டு சூரியன் உதயமாகும் வரை திக்ரு கூறிக்கொண்டு அங்கேயே இருக்க வேண்டும். மேலும் மினா, அரஃபாத் ஆகிய இடங்களில் தல்பியாவை அதிகப்படுத்த வேண்டும். தல்பியாவுக்கான நேரம் 10-ஆம் நாள் பெரிய ஜமராவில் கல்லெறியும் வரை நீடிக்கும்.

## அரஃபா (9ம் நாள்) கிரியைகள்!

1) சூரியன் உதயமானதும் ஹாஜிகள் மினாவிலிருந்து அரஃபாவை நோக்கிச் செல்ல வேண்டும். முடியுமாயின் மஸ்ஜிதுந் நமிராவில் காலையில் தங்கி தல்பியா கூறிக்கொண்டிருக்க வேண்டும்.

2) சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததும் ளுஹரையும் அஸரையும் ஜம்வு செய்து ஒரு பாங்கு இரண்டு இகாமத்துகளுடன் கஸராகத் தொழ வேண்டும். அவ்வாறுதான் முற்படுத்திய ஜம்வு-ஆக நபி (ஸல்) அவர்கள் தொழுதுள்ளார்கள் (முஸ்லிம்). இமாம் தொழுகைக்கு முன்பு சூழ்நிலைக்குப் பொருத்தமான ஓர் உரையை நிகழ்த்துவார்.

3) பிறகு அரஃபாவில் சூரியன் மறையும் வரை தங்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் சூரியன் மறைந்து அதன் மஞ்சள் நிறம் மாறும் வரை

Visit: www.tamilislam.webs.com

அரஃபாவை விட்டுச் செல்லவில்லை| என ஜாபிர் (ரழி) அறிவிக்கும் செய்தி முஸ்லிமில் உள்ளது. அரஃபாவின் எந்தப் பகுதியிலும் தங்கலாம் உர்னா என்ற பகுதியைத் தவிர. அரஃபாவில் கிப்லாவை முன்னோக்கி இருப்பது விரும்பத்தக்கதாகும். 'ஹஜ் என்றாலே அரஃபாவில் தங்குவதுதான்!'| என நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதால் அரஃபாவில் தங்குவது ஹஜ்ஜின் முதல் நிலைக் கடமை(ருக்னு)களில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

**அரஃபா:**

4) தொழுகைக்குப் பிறகிலிருந்து சூரியன் ம றையும் வரை நபி (ஸல்) அவர்கள் செய்தது போல கிப்லாவை முன்னோக்கி கைகளை உயர்த்தி மிகவும் பணிவோடு அல்லாஹ்விடம் துஆவும் திக்ரும் செய்துகொண்டிருக்க வேண்டும்.

அரஃபா நாளை விட அதிகமாக அல்லாஹ் மக்களை நரகத்தை விட்டும் விடுதலை செய்யும் நாள் வேறு இல்லை. அன்றைய தினம் அவன் இறங்கி வந்து மலக்குகளிடம் (தனது அடியார்களைப் பற்றி) பெருமையாகப் பேசிவிட்டு இவர்கள் என்ன வேண்டுகின்றனர்? என்று கூறுகிறான்| என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இங்கு நபிமார்கள் கேட்ட துஆவைக் கேட்பது மிகச் சிறந்ததாகும். அதாவது, 'துஆக்களில் சிறந்தது அரஃபா நாளில் கேட்கப்படும் துஆவாகும். நானும் எனக்கு முந்தைய நபிமார்களும் கேட்ட துஆக்களில் மிகச் சிறந்தது, லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்| என்பதாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (முஅத்தா).

# அர.்.பா (9ம் நாள்) கிரியைகள்!

அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான வாசகங்கள் நான்கு:
ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகியனவாம் என்பதும் நபி மொழி (முஸ்லிம்).
எனவே இந்த திக்ருகளை அதிகமதிகம் கூறிக்கொள்ள வேண்டும். மேலும் ஹதீஸ்களில் வந்துள்ள ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி, ஸுப்ஹானல்லாஹில் அளீம், லாயிலாஹ இல்லா அன்த்த ஸுப்ஹானக்க இன்னீ குன்து மினள்ளாலிமீன் போன்ற சிறந்த திக்ரு, துஆக்களையும் அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். இரவில்

## முஸ்தலிஃபாவில் தங்குதல்!

1) அரஃபா தினத்தின் சூரியன் மறைந்ததும் அரஃபாவிலிருந்து ம க்களை நெருக்கியடிக்காமல் அமைதியாக முஸ்தலிஃபாவிற்கு வர வேண்டும். இது பற்றி ஜாபிர் (ரழி) அவர்களின் அறிவிப்பில் வந்துள்ளதாவது: சூரியன் மறைந்து அதன் மஞ்சள் நிறம் சற்று மறையும் வரை தங்கியிருந்த நபி (ஸல்) அவர்கள், பிறகு உஸாமாவைத் தம்முடன் கஸ்வா என்னும் ஒட்டகத்தில் ஏற்றிக்கொண்டு தமது ஒட்டகத்தின் கடிவாளத்தை அது தனது தலையை முழுமையாகப் பின்னால் திருப்புமளவுக்கு இறுக்கிப் பிடித்துக்கொண்டு, மக்களே! அமைதி! அமைதி! என்று தமது வலது கையால் சைகை செய்து கூறிக்கொண்டிருந்தார்கள் (முஸ்லிம்).

2) அங்கிருந்து முஸ்தலிஃபாவை நோக்கிப் புறப்படும்போது திக்ரு, துஆ, தல்பியா, தக்பீர், இஸ்திக்ஃபார் ஆகியவற்றை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: 'நீங்கள் அரஃபாத்திலிருந்து புறப்படும்போது மஷ்அருல் ஹராமில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்!' (2:198).

**முஸ்தலிஃபாவில் இரவு தங்குதல்:**

3) முஸ்தலிஃபாவில் ஏதேனுமொரு இடத்தில் தங்க வேண்டும். மஷ்அருல் ஹராமிலோ அதற்கு அருகிலோ தங்க வேண்டுமென்றோ அதில் ஏற வேண்டுமென்றோ அவசியமில்லை. ஏனெனில், 'நான் இங்கு (மஷ்அருல் ஹராமில்) தங்கியுள்ளேன். ஆனால் முஸ்தலிஃபாவில் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம்' என்பது நபியின் கூற்றாகும் (முஸ்லிம்).

முஸ்தலிஃபாவை அடைந்ததும் மஃரிபையும் இஷாவையும் 3, 2 ரக்அத்கள் என்ற எண்ணிக்கையில் கஸ்ராகவும் ஒரு பாங்கு இரு இகாமத் என்ற கணக்கில் ஜம்ஆகவும் தொழ வேண்டும். இரண்டிற்குமிடையே எந்த நஃபிலும் இல்லை. மேலும் இஷா தொழுகையை அதற்கான கடைசி நேரமாகிய இரவின் பாதிக்கு மேல் பிற்படுத்தக்கூடாது. ஏனெனில் 'இஷாவுடைய நேரம் இரவின் பாதி வரையாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (முஸ்லிம்), எனவே அங்கு வந்து சேருவதற்கு முன்பு இஷாவுடைய நேரம் கடந்து விடும் என்ற அச்சம் ஏற்பட்டால் நேரத்தை அனுசரித்து தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும், அது அரஃபாவிலேயே தொழ வேண்டியது வந்தாலும் சரியே!

4) இந்த இரவில் முஸ்தலிஃபாவில் தங்கிவிட்டு பிறகு அங்கேயே ஃபஜ்ரையும் தொழ வேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள்,

ஃபஜ்ர் உதயமாகும் வரை அங்கேயே படுத்திருந்துவிட்டு நன்றாக வெண்மை வெளிப்பட்டதும் ஒரு பாங்கு ஓர் இகாமத்துடன் ஃபஜ்ரைத் தொழுதார்கள் என ஜாபிர் (ரழி) அறிவிக்கிறார்கள் (முஸ்லிம்). பிறகு முடிந்தால் மஷ்அருல் ஹராமில் அல்லது முஸ்தலிஃபாவின் ஓரிடத்தில் நின்று கிப்லாவை முன்னோக்கிக் கொண்டு துஆ, திக்ர், தக்பீர், தஹ்லீல் ஆகியவற்றை ஆகாயம் ந ன்றாக வெளுக்கும் வரை அதிகப்படுத்த வேண்டும்.

5) ஆகாயம் நன்றாக வெளுத்ததும் சூரியன் உதயமாகும் முன்பு அங்கிருந்து மினாவை நோக்கிப் புறப்பட வேண்டும்.

பலவீனமானவர்களும் பெண்களும் இரவின் கடைசி நேரத்திலேயே மினாவிலிருந்து கிளம்பலாம். நபி (ஸல்) அவர்கள், ஸஹர் நேரத்தில் தமது குடும்பத்தினரை முஸ்தலிஃபாவிலிருந்து அனுப்பி வைத்தார்கள்.

(புகாரீ, முஸ்லிம்) மேலும் அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழி) அவர்களும் சந்திரன் மறைந்த பின்பு முஸ்தலிஃபாவிலிருந்து புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். பெரும்பாலும் சந்திரன் இரவின் மூன்றிலொரு பகுதி சென்ற பின்பு மறையும்.

குறிப்புகள்:

1- உம்ராவில் எறிவதற்கான கற்களை முஸ்தலிஃபாவிலேயே பொறுக்க வேண்டும் எனச் சிலர் எண்ணுகின்றனர். இது தவறான கருத்தாகும், நபி (ஸல்) அவர்கள் செய்யாததுமாகும். எனவே எங்கிருந்து வேண்டுமானாலும் கற்களைப் பொறுக்கலாம். அதுபோல கற்களைக் கழுவ வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில் அவ்வாறு செய்ய வேண்டுமென்று ஹதீஸ்களில் இல்லை. ஏற்கனவே எறியப்பட்ட கற்களைக் கொண்டும் எறியக்கூடாது. சுண்டி விளையாடும்

அளவுக்குள்ளதாகவும் கொண்டைக் கடலையை விட சற்று பெரிதாகவும் கற்கள் இருக்க வேண்டும்.

2- பெரும்பாலானவர்கள் இந்த இரவில் ஃபஜ்ர் தொழுகைக்கான நேரம் வரும்முன் ஃபஜ்ர் தொழுகின்றனர். அது தவறாகும். அதற்குரிய நேரம் வரும் முன் தொழுதால் அந்தத் தொழுகை நிறைவேறாது.

## யவ்முந் நஹ்ர் (10ம் நாள்) கிரியைகள்!

**முஸ்தலிஃபாவிலிருந்து மினாவுக்குச் செல்லல்:**

1- சூரியன் உதயமாகும் முன்பு முஸ்தலிஃபாவிலிருந்து மினாவுக்குச் செல்ல வேண்டும்.

**ஜமராவில் கல்லெறிதல்:**

2- மினாவை வந்தடைந்ததும் பெரிய ஜமராவில் ஏழு கற்களைத் தக்பீர் கூறி ஒவ்வொன்றாக எறிய வேண்டும். ஜமராவை முன்னோக்கி, வலது புறம் மினாவும் இடது புறம் மக்காவும் இருக்குமாறு நின்றுகொண்டு கற்களை எறிவது சுன்னத்தாகும். அங்கு வந்ததும் தல்பியாவை நிறுத்தி விட வேண்டும்.

குர்பானி கொடுத்தல்:

3- பிறகு பலிப்பிராணியைப் பலியிட வேண்டும். அல்லது அந்தப் பொறுப்பைத் தமது சார்பாக பிறரிடம் ஒப்படைக்க வேண்டும். பலியிடுதல் தமத்துஃ மற்றும் கிரான்காரர்களுக்கு வாஜிபாகும். பலியிடுவதற்கான கால அவகாசம் துல்ஹஜ் 13-ஆம் தினத்தின் மஃரிப் வரை உண்டு. தமத்துஃ, கிரான்காரர்கள் பலியிடுவதற்கு இயலாமற்போனால் அதற்குப் பகரமாக பத்து நோன்புகள் நோற்க வேண்டும். அதுவும் ஹஜ்ஜுடைய நாட்களில் அரஃபாவுக்கு முன்பு மூன்று நாட்களும் - அதுவும் இயலாவிட்டால் அய்யாமுத் தஷ்ரீக்கில் (11,12,13 ஆகிய நாட்களில்) நோற்கலாம் - வீட்டிற்குத் திரும்பிய பின்பு ஏழு நாட்களும் நோற்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: 'யார் பலிப்பிராணியைப் பெறவில்லையோ அவர் ஹஜ்ஜின் நாட்களில் மூன்று

தினங்களும் குடும்பத்தாரிடம் திரும்பிய பின்பு ஏழு தினங்களும் நோன்பு நோற்க வேண்டும். இதுவே பரிபூரணமான பத்து தினங்களாகும்.' (2:196).

முடி இறக்குதல்:

4- பலியிட்ட பிறகு தலை முடியை மழிக்கவோ குறைக்கவோ வேண்டும். மழிப்பதே மிகச் சிறந்தது. இத்துடன் இஹ்ராமிலிருந்து முதல் விடுதல் ஏற்படும். இப்போது இஹ்ராமில் தடுக்கப்பட்ட அனைத்தும் அனுமதிக்கப்படும், உடலுறவைத் தவிர.

ஹஜ்ஜின் தவாஃபு:

5- பிறகு மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜுடைய தவாஃபை - தவாஃபுல் இஃபாளாவைச் செய்ய வேண்டும். அதாவது கஃபாவை ஏழு முறை சுற்றி

வர வேண்டும். இதில் விரைதலோ வலது தோள்பகுதியைத் திறந்து வைத்தலோ கிடையாது. இந்தத் தவாஃபு ருக்னாகும்.

6- தவாஃபுக்குப் பின்பு இரு ரக்அத்துகள் முடிந்தால் மகாமு இப்ராஹீமில் அல்லது பள்ளியின் எங்கு வேண்டுமானாலும் தொழ வேண்டும். பிறகு தமத்துஃ செய்பவர்கள் ஸஃபா மர்வாவுக்கிடையே ஸயீ செய்ய வேண்டும். ஏனெனில் அவர்கள் முதலில் செய்த ஸயீ உம்ராவுக்குரியது. ஆனால் இஃப்ராத் மற்றும் கிரான் செய்பவர்கள் ஒரு ஸயீ செய்தால் போதும். அதாவது தவாஃபுல் குதூமுக்குப் பிறகு அவர்கள் ஸயீ செய்திருந்தால் தவாஃபுல் இஃபாளாவுக்குப் பிறகு தனியாக வேறொரு ஸயீ தேவையில்லை.

7- இஹ்ராமிலிருந்து முழுமையாக விடுபடுவது மூன்று காரியங்களின் மூலமாக அமையும்: பெரிய ஜமராவில் கல்லெறிதல், முடியை மழித்தல் அல்லது சிறைத்தல், தவாஃபுல் இஃபாளாவுடன் கூடிய ஸயீ (முன்னரே செய்யவில்லையாயின்) இம்மூன்றும் முடிந்துவிட்ட பிறகு இஹ்ராமின் மூலம் தடுக்கப்பட்ட உடலுறவு உட்பட அனைத்தும் அனுமதிக்கப்படும்.

**முக்கிய குறிப்புகள்:**

- (1) மேற்கண்ட வரிசைக்கிரமம் சுன்னத்தான முறையாகும். இதைப் பேண இயலாமற்போனாலும் எந்தக் குற்றமுமில்லை. முடி வெட்டுவதற்கு முன்பு தவாஃபு செய்தாலும் கல்லெறிவதற்கு முன்பு முடிவெட்டினாலும் தவாஃபுக்கு முன்பு ஸயீ செய்தாலும் இவ்வாறு வரிசை முறையில் மாற்றம் நிகழ்ந்தால் எந்தக் குற்றமுமில்லை.

- (2) பத்தாம் நாள் கல்லெறிய வேண்டிய நேரம் பொதுவாக சூரியன் உதயமான பிறகுதான் துவங்குகின்றது. ஏனெனில் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியதாவது: முஸ்தலிஃபாவில் தங்க வேண்டிய இரவில் நாங்கள் அப்துல் முத்தலிப் கோத்திரத்தைச் சேர்ந்த சிறுவர்களை முற்கூட்டியே ஜமராவின் அருகில் கொண்டுபோயிருந்தோம். அப்போது அவர்கள் எங்களின் தொடைகளைச் சுரண்டி(க் கல்லெறிய அனுமதி கேட்டு)க் கொண்டிருந்தபோது, குழந்தைகளே! சூரியன் உதிக்கும் வரை கல்லெறியக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால் பெண்களும் பலவீனமானவர்களும் மினாவை வந்தடையும் இரவின் கடைசிப் பகுதியிலேயே கல்லெறியலாம். ஏனெனில் இது பற்றி அஸ்மா (ரழி) அவர்களின் அடிமை அறிவிப்பதாவது: அஸ்மா (ரழி) அவர்கள், முஸ்தலிஃபாவில் இறங்கிய பிறகு சற்று நேரம் தொழுதுவிட்டு சந்திரன் மறைந்துவிட்டதா? என்று கேட்டார்கள். நான் இல்லை

என்றதும் மீண்டும் சற்று நேரம் தொழுதுவிட்டு சந்திரன் மறைந்துவிட்டதா? என்று மீண்டும் கேட்டார்கள். நான் ஆம் என்றதும் புறப்படுங்கள்! என்று கூறிவிட்டு புறப்பட்டு ஜமராவுக்கு வந்து கல்லெறிந்துவிட்டு தமது இருப்பிடத்திற்கு வந்து ஃபஜ்ரு தொழுதார்கள். பிறகு நான், என்ன இது, பொழுது விடிவதற்குள் இவ்வாறு செய்யலாமா? என்று கேட்டேன். அதற்கவர், பெண்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதியளித்துள்ளார்கள் எனக் கூறினார் (புகாரீ, முஸ்லிம்)

- (3) பெரிய ஜமராவில் கல்லெறிவதற்கான நேரம் சூரியன் உச்சியிலிருந்து சாயும் வரை நீடிக்கும். அதற்குள் எறிய இயலாத சூழ்நிலை ஏற்பட்டால் அதற்குப் பிறகும் ஏன் இரவிலும்கூட எறியலாம்.

# யவ்முந் நஹ்ர் (10ம் நாள்) கிரியைகள்!

- (4) முடியைக் குறைக்கும்போது தலையின் எல்லாப் பகுதியிலிருந்தும் குறைக்க வேண்டும். பெண்களின் தலை முடியை ஒன்று சேர்த்து அதன் நுனியில் நகக்கண் அளவுக்கு வெட்ட வேண்டும்.

## அய்யாமுத் தஷ்ரீக்கின் (11,12,13 ஆம் தினங்களின்) கிரியைகள்!

**அய்யாமுத் தஷ்ரீக்கில் மினாவில் தங்குதல்:**

1- பெருநாள் தினத்தன்று தவாஃபும் ஸயீயும் செய்தபின் மினாவுக்கு வந்து 11, 12, 13 (தாமதித்தவருக்கு மட்டும்) ஆகிய இரவுகளில் தங்குவது வாஜிபாகும்.

2- இம்மூன்று தினங்களிலும் மூன்று ஜமராக்களுக்கும் தலா ஏழு கற்கள் வீதம் எறிய வேண்டும். ஆனால் இதற்கான நேரம் சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த பின்புதான் தொடங்குகின்றது. ஆக ஒவ்வொரு நாளும் 21 கற்கள் வீதம் மூன்று ஜமராக்களுக்கும் எறிய வேண்டும்.

3- முதலில் கைஃப் மஸ்ஜிதுக்கருகிலுள்ள முதல் ஜமரா, பிறகு நடு ஜமரா, பிறகு பெரிய ஜமரா என வரிசையாக எறிய வேண்டும். முதலாவது மற்றும் இரண்டாவது ஜமராக்களுக்குக் கல்லெறிந்த பிறகு கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்வது விரும்பத்தக்கதாகும். பெரிய ஜமராவுக்குப் பிறகு துஆ செய்ய வேண்டியதில்லை. இவ்வாறே மூன்று தினங்களும் கல்லெறிய வேண்டும்.

4- 12ஆம் நாள் கல்லெறிந்த பின்பு பயணம் மேற்;கொள்ள விரும்புபவர் சூரியன் அஸ்தமிக்கும் முன்பு அங்கிருந்து புறப்பட்டு ஹரமுக்கு வந்து தவாஃபுல் விதாஃ செய்துவிட்டு ஊருக்குப் புறப்படலாம். அல்லது 12-ஆம் நாளும் மினாவில் தங்கி கல்லெறிந்துவிட்டு பிறகுப் பயணமாகலாம். இதுவே சிறந்ததாகும். அல்லாஹ் கூறுகிறான்: 'இரண்டு தினங்களில் யார் அவசரமாகப் புறப்படுகின்றாரோ அவர் மீது எந்தக் குற்றமுமில்லை. யார்

தாமதிக்கின்றாரோ அவர்மீதும் எந்தக் குற்றமுமில்லை. தக்வாவுடையவர்களுக்கு இதுவே நன்று!' (2:203).

5- 12ஆம் நாள் கல்லெறிந்துவிட்டுப் பயணமாக விரும்புபவர் சூரியன் மறையும் முன்பு மினாவிலிருந்து வெளியேற வேண்டும். புறப்படும் முன் சூரியன் மறைந்துவிட்டால் அன்றைய தினம் மினாவிலேயே இரவு தங்க வேண்டும். 13-ஆம் நாள் கல்லெறியவும் வேண்டும்.

குறிப்புகள்:

(1) கல்லெறிய வேண்டிய நேரம் சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த பிறகு ஆரம்பித்து அது மறைவதோடு முடிவடைகின்றது. அவசியப்பட்டால் இரவிலும் எறியலாம். ஏனெனில் 'மேய்ப்பவன் இரவில் கல்லெறிவான் பகலில் மேய்ப்பான்'|என்பது நபி மொழி.

(2) முதுமை, வியாதி, சிறு பிராயம் போன்ற அச்சம் மற்றும் இயலாமை ஏற்பட்டாலேயொழிய கல்லெறிவதற்குப் பிறரைப் பொறுப்பாளியாக்கக் கூடாது. பொறுப்பாளி தமக்காக முதல் ஜமராவில் எறிந்த பின்பு பொறுப்புச் சாட்டியவருக்காக எறிய வேண்டும் இவ்வாறே ஏனைய ஜமராக்களிலும் நடந்துகொள்ள வேண்டும்.

(3) ஜமராக்களில் முதலில் சிறியது பிறகு நடுத்தரமானது அடுத்து பெரியது என்ற வகையில் கல்லெறிவதில் வரிசைக் கிரமம் அவசியம்.

(4) ஹஜ்ஜின் அனைத்து அமல்களும் முடிந்து ஊருக்குப் பயணமாகும்போது 'தவாஃபுல் விதா' செய்வது கட்டாயமாகும். அது மாதவிடாய், பேற்றுத் தொடக்கு ஏற்பட்டவர்கள் மீது கடமையில்லை.

இத்துடன் ஹஜ்ஜின் கிரியைகள் நிறைவுறுகின்றன.

## ஹஜ்ஜின் ருக்னுகள் மற்றும் வாஜிபுகள்!

### ஹஜ்ஜின் ருக்னு(முதல் நிலைக் கடமை)கள்:

- இஹ்ராம் (நிய்யத்)
- அரஃபாவில் தங்குதல்
- தவாஃபுல் இஃபாளா
- ஸயீ

### ஹஜ்ஜின் வாஜிபு (இரண்டாம் நிலைக் கடமை)கள்:

- மீக்காத்தில் இஹ்ராம்
- அரஃபாவில் பகலில் தங்கியவருக்கு மஃரிப் அதில் தங்குதல்
- முஸ்தலிஃபாவில் இரவு தங்குதல்
- அய்யாமுத் தஷ்ரீக்கில் மினாவில் தங்குதல்
- ஜமராக்களில் நான்கு தினங்களும் வரிசைப்படி கல்லெறிதல்

- முடியை மழித்தல் அல்லது குறைத்தல்
- குர்பானி கொடுத்தல் (கிரான் மற்றும் தமத்துஃ காரர்களுக்கு மட்டும்)

**தவாஃபுல் விதாஃ**

ஹஜ்-உம்ராவின் முதல் நிலைக் கடமைகள் - ருக்னுகளில் எதையேனும் ஒருவர் விட்டுவிட்டால் அதைச் செய்யாமல் ஹஜ்ஜோ உம்ராவோ நிறைவேறாது. அவற்றின் இரண்டாம் நிலைக் கடமைகள் - வாஜிபுகளில் எதையேனும் ஒருவன் விட்டுவிட்டால் அவன் ஹரமிலேயே ஓர் ஆட்டைப் பலியிட்டு அங்குள்ள ஏழைகளுக்குப் பங்கிடவேண்டும். அதிலிருந்து அவன் எதையும் உண்ணக்கூடாது. அந்த நிலையில் அவனுடைய ஹஜ்ஜும் உம்ராவும் நிறைவேறும்.

## மஸ்ஜிதுந் நபவியை தரிசித்தல்

1) நபி (ஸல்) அவர்களின் பள்ளியில் தொழுவதற்காக எந்த நேரம் வேண்டுமானாலும் பயணம் மேற்கொள்வதற்கு மார்க்கம் அனுமதிக்கிறது. 'எனது இந்தப் பள்ளியில் தொழுவது மஸ்ஜிதுல் ஹராமைத் தவிரவுள்ள அனைத்து மஸ்ஜிதுகளிலும் தொழுவதைவிட ஆயிரம் மடங்கு சிறந்தது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (புகாரீ, முஸ்லிம்). ஆனால் நபி (ஸல்) அவர்களின் கப்ரையோ மற்றவர்களின் கப்ருகளையோ தரிசிப்பதற்காக பயணம் மேற்கொள்ளக் கூடாது. ஏனெனில் மூன்று பள்ளிகளைத் தவிர வேறு எங்கும் புனிதப் பயணம் மேற்கொள்ளக்கூடாது. அவை: மஸ்ஜிதுல் ஹராம், எனது இந்தப் பள்ளி, மஸ்ஜிதுல் அக்ஸா' என்பது நபிமொழி (புகாரீ, முஸ்லிம்).

2) மஸ்ஜிதுந்நபவீயில் தொழுவதற்காகப் பயணம் மேற்கொள்வதற்கும் ஹஜ்ஜிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தத் தரிசனம் ஹஜ்ஜுக்கு முன்போ பின்போ நிகழ வேண்டும் என்பது ஹஜ்ஜின் சுன்னத்களிலோ அதன் முழுமைப்படுத்தலிலோ இல்லை. இந்தத் தரிசனம் ஹஜ்ஜுக்கு முன்போ பின்போ நிகழ வேண்டும் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியதாக வரும் செய்திகள் யாவும் ஆதாரமற்றவை. இமாம் இப்னு ஹஜர் (ரஹ்), அல்உகைலீ (ரஹ்), இப்னு தைமிய்யா (ரஹ்) ஆகியோர் இந்தக் கருத்தைத் தாங்கிய செய்திகளைக் குறிப்பிட்டுவிட்டு முறையே அனைத்தும் பலவீனமானவை, ஆதாரப்பூர்வமானவையல்ல, இட்டுக்கட்டப்பட்டவை எனக் கூறியுள்ளனர்.

3) மஸ்ஜிதுந் நபவீயை அடைந்ததும் மற்ற மஸ்ஜிதுகளில் நுழையும்போது நடந்துக் கொள்வதைப் போல வலது காலை

முன்வைத்து, 'பிஸ்மில்லாஹி வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹி அல்லாஹும்மஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மத்திக, அவூது பில்லாஹில் அளீம் வ பி வஜ்ஹிஹில் கரீம் வ சுல்தானிஹில் கதீம் மினஷ்ஷைத்தானிர்ரஜீம்' என்று ஓதிக்கொண்டு நுழைய வேண்டும்.

4) பிறகு அங்கு தஹிய்யத்துல் மஸ்ஜித் இரு ரக்அத்கள் தொழ வேண்டும்.

5) பிறகு நபி (ஸல்), மற்றும் அன்னாரின் தோழர்களான அபூ பக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோரின் கப்ருகளுக்கு அருகே சென்று, அஸ்ஸலாமு அலைக்க யாரஸூலல்லாஹ் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு, அஸ்ஸலாமு அலைக்க யா அபா பக்ர், அஸ்ஸலாமு அலைக்க யா உமர், என்று கூறி விட்டு அங்கு தாமதிக்காமல் சென்று விட வேண்டும்.

6) மஸ்ஜிது குபாவைத் தரிசித்து அங்கு இரு ரக்அத்கள் தொழுவது விரும்பத் தக்கதாகும். ஏனெனில், யார் தமது வீட்டில் சுத்தமாகி - உழூ செய்து பிறகு மஸ்ஜிது குபா வந்து இரு ரக்அத்கள் தொழுகின்றாரோ அவருக்கு உம்ராவின் கூலி கிடைக்கும் என்பது நபிமொழி (அஹ்மத், நஸயீ).

7) பொது மைய வாடியான பகீஃ, உஹதில் ஷஹீதானவர்களின் கப்ருகள் ஆகியவற்றை ஸியாரத் செய்வதும் விரும்பத்தக்கதே. ஏனெனில் ந பி (ஸல்) அவர்கள் அக்கப்ருகளை ஸியாரத் செய்துள்ளதுடன் அவர்களுக்காக துஆவும் செய்துள்ளார்கள். இது பற்றி பொதுவாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது: கப்ருகளைத் தரிசிப்பதை விட்டும் உங்களை நான் தடுத்திருந்தேன். அறிந்துக்கொள்க! இனி அவற்றைத் தரிசியுங்கள்! (முஸ்லிம்). மேலும் நபி (ஸல்) அவர்கள், கப்ருகளைக்

கண்டால், 'அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்லத்தியாரி மினல் முஃமினீன வல் முஸ்லிமீன், வ இன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன், நஸ்அலுல்லாஹ லனா வலகுமுல் ஆஃபியா'|என்று கூற வேண்டுமென தமது தோழருக்குக் கூறியுள்ளார்கள் (முஸ்லிம்).

## 'ஹாஜி' என்ற அடைமொழி - ஓர் நூதனச் செயல்(பித்அத்).

வல்ல அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் கூறுகிறான்:

'எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டுமே) நாடினால் அவர்களுடைய செயல்களுக்குரிய (பலன்களை) இவ்வுலகத்திலேயே நிறைவேற்றுவோம்: அவற்றில் குறைவு செய்யப்படமாட்டார்கள். இத்தகையோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறெதுவும் இல்லை: (இவ்வுலகில்) இவர்கள் செய்த

யாவும் அழிந்து விட்டன: அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே!' (அருள்மறை குர்ஆன் அத்தியாயம் - 11 ஸூரத்துல் ஹூது - 15 மற்றும் 16ஆம் வசனங்கள்).

'ஹஜ்' என்கிற கடைமையை இஸ்லாத்தின் இறுதி கடமையாக அல்லாஹ் முஸ்லிம்கள் மீது விதித்திருக்கிறான். முஸ்லிமான எவரிடம் பொருளாதார வசதியும், உடல் வலிமையும் இருக்கின்றதோ, அவர் ஹஜ் செய்வது கட்டாயக் கடமையாகும். மேலும் அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் 'யார் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து அசிங்கமான வார்த்தைகள் பேசாமல், பாவமான காரியங்களில் ஈடுபடாமல் இருக்கிறாரோ, அவர் ஹஜ்ஜை முடித்துவிட்டுத் திரும்புகிற போது அன்று பிறந்த பாலகன் போல் திரும்புகிறார்.' (ஆதார நூல்: புஹாரி).

இவ்வாறு அல்லாஹ் விதித்த கடமையான ஹஜ்ஜை தூய்மையான எண்ணத்துடனும், செயல்களுடனும் செய்துவிட்டு வந்த நம் இஸ்லாமிய சகோதரர்கள் 'ஹாஜி' என்றும், சகோதரிகள் தங்கள் பெயர்களுக்கு முன்னால் 'ஹாஜிமா' என்றும் அடைமொழி இட்டுக்கொள்வது காலங்காலமாக நம் சமுதாய மக்களின் வழக்கமாக இருந்து வருகிறது.

அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதினாவிலிருந்து மக்கா வந்து 'ஹஜ்' செய்துவிட்டு மீண்டும் மதினா திரும்பினார்கள். அவர்களுடன் அவர்களின் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) அவர்களும் 'ஹஜ்' என்னும் கடமையை முடித்துவிட்டு மதினா திரும்பினார்கள். அண்ணல் நபி(ஸல்) அவர்களோ அல்லது அவர்களின் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) அவர்களோ தங்கள் பெயர்களுக்கு முன்னால் 'ஹாஜி'

என்றோ அல்லது 'ஹாஜிமா' என்றோ அடைமொழி இட்டுக் கொள்ளவில்லை. அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'ஹஜ்' செய்தபோது அவர்களுடன் அவர்களின் அன்புத்தோழர்கள் பலர் 'ஹஜ்' என்கிற கடமையை செய்தார்கள். அவர்களில் எவரையும் நாம் 'ஹாஜி' என்று அழைப்பதில்லை. இருப்பினும் 'ஹஜ்' என்னும் கடமையை முடித்துவிட்ட நம் சமுதாய மக்கள் தஙகள் பெயருக்கு முன்னால் 'ஹாஜி' அல்லது 'ஹாஜிமா' என்று அடைமொழி இட்டுக் கொள்ளும் வழக்கம் இன்றும் வேரூன்றி போய் இருப்பதை காண்கிறோம்.

அல்லாஹ் விதித்த ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ்ஜினை நிறைவேற்றி வந்தவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் 'ஹாஜி' என்ற அடைமொழியைச் சேர்த்து கொள்வதில் பலவிதத்தில் உள்ளது. ஒரு முறைக்கு மேல் இன்னொரு முறை 'ஹஜ்' கடமையை நிறைவேற்றி வந்தவர்களில் சிலர் 'அல்-ஹாஜ்' என்ற அடைமொழியைத் தங்கள் பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொள்வதை நாம் நம் அன்றாட வாழ்வில் கண்டு வருகிறோம். அதுமட்டுமில்லாமல் தாங்கள் வைத்திருக்கும் கடைகளுக்கு

ஹாஜி அன் ஸன்ஸ் என்றும், ஹாஜி மளிகைக்கடை என்றும் பெயர் வைத்துக் கொண்டு விளம்பரம் தேடிக்கொள்ளும் நிலையையும் பார்க்கிறோம். தவிர ஹஜ் என்னும் இஸ்லாத்தின் கடமையை முடித்தவிட்டு வந்தவர்களை, அறிந்தவர்கள் சாதாரணமாக அழைக்கும்போது கூட 'ஹாஜி' என்று அழைப்பதையும், அவ்வாறு அழைக்கப்படுவதை சம்பந்தப்பட்டவர் அவ்வாறு அழைக்கக் கூடாது என்று மறுக்காமல், அவ்வாறு அழைப்பதே தமக்குப் பெருமை சேர்க்கும் என்ற நோக்கத்தில் இருந்து வருவதையும் நாம் அன்றாட வாழ்வில் கண்டு வருகிறோம். மேற்படி செயல்கள் இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாத, இஸ்லாத்தில் புதிதாக புகுத்தப்பட்ட ஒரு நூதன செயலாகும்.

'நமது உத்திரவின்றி யாரேனும் ஒரு அமலைச் செய்தால் அது நிராகரிக்கப்படும்' என அல்லாஹ்வின் தூதர் அண்ணல்

நபி(ஸல்)அவர்கள் சொன்னார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) ஆதார நூல்: முஸ்லிம்).

அல்லாஹ் முஸ்லிம்கள் மீது விதித்த கடமைகளான - ஈமான் கொள்வது, இறைவனைத் தொழுவது, ஜக்காத் கொடுப்பது, நோன்பு நோற்பது போன்ற நான்கு கடமைகளைப் போன்று ஐந்தாவதாக அல்லாஹ் விதித்த கடமைதான் 'ஹஜ்' என்கிற கடமையுமாகும். அல்லாஹ் விதித்த மற்ற கடமையான ஈமான் கொண்டவர் எவரும் தனது பெயருக்கு முன்னால் 'ஈமானி' (ஈமான் கொண்டவர்) என்கிற அடைமொழியை இட்டுக் கொள்வதில்லை. அதுபோல இறைவனை ஐவேளையும் தவறாமல் தொழுதுவரும் எவரும் தம் பெயருக்கு முன்னால் 'முஸல்லி' (தொழுகையாளி) என்கிற அடைமொழியை இட்டுக் கொள்வதில்லை. தவிர நோன்பு நோற்கும் எவரும், அல்லது ஜக்காத் கொடுக்கும் எவரும்

தங்கள் பெயருக்கு முன்னால் 'ஸொம்வி' (நோன்பாளி) என்றோ, 'ஜக்காத்தி' (ஜக்காத் வங்குபவர்) என்கிற அடைமொழிகளையோ இட்டுக் கொள்வதில்லை.

ஆனால் இந்த இறுதிக்கடமையான ஹஜ்ஜை முடித்து விட்டவர்கள் மாத்திரம் (குறிப்பாக இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழ்ந்து வரும் ஹஜ் கடமையை முடித்துவிட்ட முஸ்லிம்கள்) தங்கள் பெயருக்கு முன்னால் ஹாஜி என்கிற அடைமொழியைச் சேர்த்து கொள்கிறார்கள். இவ்வாறு 'ஹாஜி' என்று தங்கள் பெயருக்கு முன்னால் அடைமொழி இட்டுக் கொள்ளும் வழக்கம் அரபு நாடுகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களிடையே இல்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வாறு விளம்பரத்திற்காகவும், இந்த உலகில் தங்கள் புகழ் ஒங்கவேண்டும் என்ற பெருமைக்காகவும் அல்லாஹ் விதித்த

கடமைகளை செய்யக் கூடியவர்களைப் பற்றி அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டுகின்றான்:

'எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டுமே) நாடினால் அவர்களுடைய செயல்களுக்குரிய (பலன்களை) இவ்வுலகத்திலேயே நிறைவேற்றுவோம்: அவற்றில் குறைவு செய்யப்படமாட்டார்கள். இத்தகையோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறெதுவும் இல்லை: (இவ்வுலகில்) இவர்கள் செய்த யாவும் அழிந்து விட்டன: அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே!' (அருள்மறை குர்ஆன் அத்தியாயம் - 11 ஸூரத்துல் ஹூது - 15 மற்றும் 16ஆம் வசனங்கள்).

அவ ர்கள் செய்யும் இது போன்ற நூதனமான காரியங்களுக்கான பலன்களை இவ்வுலகத்திலேயே நிறைவேற்றுவதாக வாக்களிக்கும் இறைவன், மறுமையில் அவர்களுக்கான பலன் நரக நெருப்பைத் தவிர வேறெதுவும் இல்லை என்று எச்சரிக்கையும் விடுக்கிறான். மேலும் இவ்வுலகில் அவர்கள் செய்த செயல்கள் யாவும் அழிந்துவிடும் என்றும், அவர்கள் செய்து கொண்டிருப்பவை யாவும் வீணான செயல்கள் என்றும் அல்லாஹ் கூறுகின்றான்.

இவ்வாறு அல்லாஹ் விதித்த கடமைகளை நிறைவேற்றும்போது - அல்லாஹ்வுக்காக மட்டுமே செய்கிறோம் என்கிற எண்ணம் இல்லாமல் இவ்வுலக வாழ்க்கையில் பெயரும், பெருமையும் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யக் கூடிய செயல்கள் யாவும் நிராகரிக்கப்படும்

என்பதை அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அறிவித்த கீழ்க்காணும் செய்தியிலிருந்து அறிந்து கொள்ளலாம்:

'நமது உத்தியின்றி யாரேனும் ஒரு அமலைச் செய்தால் அது நிராகரிக்கப்படும்' என அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி(ஸல்)அவர்கள் சொன்னார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) ஆதார நூல்: முஸ்லிம்).

மேலே குறிப்பிட்டபட்ட அருள்மறை குர்ஆன் வசனத்தை கருத்தில் கொண்டு, அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் வழிமுறைப்படி ஹஜ் என்னும் கடமையை முடித்து விட்ட இஸ்லாமிய சகோதர, சகோதரரிகள் தங்களுடைய பெயருக்கு முன்னால் 'ஹாஜி' என்றும், 'ஹாஜிமா' என்றும் அடைமொழிகள் இடுவதை விட்டும்

தவிர்ந்து கொள்வார்களாக! மனிதனை நரகிற்கு இட்டுச் செல்லும் இது போன்ற நூதனம்(பித்அத்) ஆன காரியங்களிலிருந்து வல்ல அல்லாஹ் நம்மைப் பாதுகாத்தருள்வானாக!